**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.64/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | **சௌமியா** |
| Father's /Husband Name | : | **பிரபாகரன்** |
| Village | : | **புளியங்குடி** |
| Taluk | : | **திருக்கண்ணபுரம்** |
| Age | : | 24 |
| Occupation | : | **வீட்டுக்குடித்தனம்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 05th day of August 2025.
A1, A2 present.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது திருகண்ணபுரம் தாலுக்கா, புளியங்குடி கிராமத்தில் எனது கணவருடன் வசித்து வருகிறேன். எனது தாயார் வீடு எட்டியலூரில் உள்ளது. ஆஜர் எதிரிகளை இருவரையும் எனக்கு தெரியும். அவர்கள் எனது பெற்றோர் வீட்டிற்கு அருகில் வசிப்பவர்கள். எனது பெற்றோர் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரிகள் வீட்டிற்கும் வேலி பிரிப்பது சம்மந்தமாக முன்பகை இருந்தது. கடந்த 23.02.2025 ம் தேதி மதியம் 03.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் இருவரும் வந்து வேலியை பிரித்தார்கள். எனது அப்பாவை கெட்ட வார்த்தைகளால் திட்டினார்கள். அதே தினம் மாலை 05.00 மணியளவில் நான் எனது பெற்றோர் வீட்டு கொல்லையில் குளித்துக்கொண்டிருந்தேன் அப்போது ஆஜர் எதிரிகள் இருவரும் எங்கள் வீட்டு கொல்லைக்குள் வந்து எங்கடி உன் அப்பன் தேவடியா, குச்சிகாரி என அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எனது பாவாடையை அவிழ்த்து விட்டார்கள் ( சாட்சி அழுதுக்கொண்டே சாட்சியம் அளிக்கிறார்) எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டியதால் எனக்கு கேவலமாகிவிட்டது. எதிரிகள் எனது பாவாடையை அவிழ்த்துவிட்டதால் எனக்கு கேவலமாகவும், அசிங்கமும் ஏற்பட்டது. திரும்பவும்

அந்த ஊருக்குள் வருவதற்கு எனக்கு கேவலம் ஏற்பட்டது. ஆஜர் எதிரிகள் இவருவம் எனது கழுத்தில் கையை வைத்து என்றைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள். அதனால் எனது பெற்றோர் வீட்டிற்கு சென்று இருப்பதற்கே எனக்கு பயமாக உள்ளது. எனக்கு ஏற்பட்ட எதிரிகள் என்னை மார்பில் குத்தியதால் எனக்கு வலி இருந்ததால் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக எனது அம்மா கொண்டு போய் சேர்த்தார். நான் சிகிச்சையிலிருந்த போது குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் நான் சொன்னதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் தொடர்ந்து 5 நாட்களை வரை திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் நான் புகார் கொடுத்த அன்று என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

போலீசார் சம்பவம் தொடர்பாக என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் புகார் வாங்கிய அன்று விசாரித்தார்கள். அதை பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லும் சமயத்தில் எனது அப்பா கொல்லையில் இருந்து வந்தார். அப்பா வேலை பார்த்த கொல்லைக்கும் நான் இருந்த கொல்லைக்கும் எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் அரை கிலோமீட்டார் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் என்னை அடித்த பிறகு எனது அப்பாவை அடிக்கும் போது எங்கள் அம்மா வந்தார். அந்த சமயத்தில் எதிரிகள் எனது அப்பாவை தாக்கி கையில் காயம் ஏற்பட்டது. அதற்கு எனது அப்பா மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால் இல்லை. எனது அப்பா வீட்டிற்கு பக்கத்தில் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 20 அல்லது 30 வீடுகள் இருக்கும். பொதுவாக கிராமத்தில் ஏதாவது பிரச்சனை ஏற்பட்டால் கிராம மக்கள் உதவி வருவார்கள் என்றால் சரிதான். ஆனால் அப்போது அந்த சம்பவம் நடந்த சமயத்தில் யாரும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கொல்லை வேலி அடைப்புடன் கூடிய கொல்லை என்றால் சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தை வெளிநபர்கள் யாரும் பார்த்தார்கள் என்றால் இல்லை எதிரிகள் என்னை வெளியில்

இழுத்துக்கொண்டு வரும்போது தான் பார்த்தார்கள். எதிரிகள் என்னை வெளியில் இழுத்துக்கொண்டு வரும்போது கிராமத்தில் எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்றால் இழுத்துக்கொண்டு வரும்போது எத்தனை நபர்கள் பார்த்தார்கள் என்று சரியாக தெரியவில்லை. ஊர் மக்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில் எனது அப்பா உள்ளே வந்தார். அதற்கு முன்பாக கொல்லை பகுதியில் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது அப்பா அம்மா பார்க்கவில்லை அதன் பிறகு தான் பார்த்தார்கள். போலீசார் விசாரித்த போது கிழிந்ததாக சொல்லப்படும் பாவாடை துணியை கொடுத்தீர்களா என்றால் நாங்கள் கூறினோம் அவர்கள் எடுத்துக்கொள்ளவில்லை. எனது தகப்பனார் வேலை பார்க்கும் கொல்லையானது சுந்தருக்கு சொந்தமானது. சுந்தர் என்ற நபர் கட்சி ரீதியாக பிரபலமானவர் என்றால் சரிதான். அந்த சுந்தர் என்பவரும் நானும் எதிரிகளும் வெவ்வேறு சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். சமூக ரீதியாக எதிரிகள் தரப்பிற்கும் சுந்தர் என்பவர் தரப்பிற்கும் அடிக்கடி பிரச்சனை ஏற்படும் வருமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மதியம் 3 1/2 மணிக்கு வேலியை பிரிப்பது பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியுமா என்றால் தெரியும். எதிரிகள் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் கொல்லைக்கு எங்கள் வீட்டு தாழ்பாளை உடைத்துக்கொண்டு உள்ளே வந்தார்களா என்றால் சரிதான். இந்த விபரத்தை நான் போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன். போலீசார் அதை பார்த்தார்களா என்றால் தெரியாது நான் மருத்துவமனையில் இருந்தேன். புகாரை யார் எழுதியது என்றால் நான் சொல்ல சொல்ல குடவாசல் போலீசார் எழுதினார்கள். புகார் கொடுக்கும் போது எதிரிகள் என்னை அசிங்கமாக திட்டியதால் எனக்கு கேவலம் ஏற்பட்டது என்று கூறினேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறினேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் என் பாவாடை அவிழத்துவிட்டதாக எனக்கு கேவலமும் அசிங்கமும் ஏற்பட்டதாக போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறினேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளின் செய்கையினால் நான் ஊருக்கு வருவதற்கே கேவலமாக இருந்தது என்று போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறினேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளின் செய்கையால் எனது வீட்டிற்கு

வருவதற்கே பயமாக உள்ளது என்று போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறினேன் என்றாலும் சரியல்ல. எதிரிகள் எனது மார்பில் குத்தியதை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் கூறினேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி கூறினேன் என்றாலும் சரியல்ல. சம்பவம் நடந்தாக சொல்லப்படும் சமயத்தில் நான் எத்தனை மாதம் கர்ப்பமாக இருந்தேன் என்றால் மூன்று மாதம் கர்ப்பமாக இருந்தேன். எனது அப்பா வீட்டிற்கு வந்து எத்தனை மாதம் தங்கியிருந்தேன் என்றால் 1 மாதத்திற்கு குறைவாக தான் இருந்தேன். வயிற்றில் வளரும் கருவிற்கு எங்கு சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் நான் அனைத்து சிகிச்சையையும் முடித்து விட்டுத்தான் எனது தகப்பனார் வீட்டிற்கு வந்தேன். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நான் அந்த சமயத்தில் எனது தகப்பனார் வீட்டிலேயே இல்லை என்றாலும், எனது தகப்பனார் வேலை செய்யும் சுந்தர் என்பவரின் அறிவுறுத்தலின் பேரில் என்னை ஒரு கருவியாக பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் கொல்லை பகுதிக்கு வரவில்லை என்றாலும், எந்த விதமான குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் மீது தவறான புகாரை கொடுத்துவிட்டு அதை அனுசரித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.08.05 15:52:46 +0530

District Munsif-Cum-
Judicial Magistrate,
Kodavasal.